Vol. 5 No. 4 July 2021 E-ISSN: 2456-5571

# இரட்டைக்காப்பியங்களில் அறங்கள்

**முனைவர் பீ. பெரியசாமி**
*தமிழ்த்துறைத்தலைவர்*
*டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்)*
*விளாப்பாக்கம்*

***ஆய்வுச்சுருக்கம்***
*படைக்கப்படும் இலக்கியங்கள் எதுவாயினும் படித்து மகிழ்வதற்கு உரியதாக மட்டும் அமையாமல் ஏதேனும் ஒரு வகையில் சமுதாயத்திற்குத் தேவையான அறங்களைக் கூறிச் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முனையவேண்டும். சமுதாய நலனில் நாட்டம் கொள்ளாத படைப்புகள் கால வெள்ளத்தால் அழிந்துபடும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சமுதாய நலம் கருதி பல நல்லறங்களை விளக்கிச் சொல்கின்றார். அதேபோல், மணிமேகலையில் சாத்தனார் பௌத்த சமயக் கருத்துகளை அதிகம் கூறினாலும், பொது நிலையில் மக்களை நல்வழிப்படுத்தும் நல்லறங்கள் பலவற்றைக் கூறிச் செல்வதைக் காண முடிகின்றது. அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற கருத்தும், அரசனுடைய பிழையைச் சுட்டி அழும் பாவை மன்றமும் அரசியல் அறத்தின்பாற் பட்டனவே என்பது தெரிய வருகின்றது. கள்ளையும், உயிர்க்கொலையையும் இன்றும் சான்றோர் வெறுத்து வாழ்வதும், அவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றனர். சாத்தனார் கூறும் இரு அறங்களும் பௌத்த சமயம் சார்ந்த அறங்களாக இருந்தபோதிலும் அவை பொது அறமாகக் கருதப்படும். கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐந்திலும் மனத்தைச் செலுத்தாது ஒழுக்கமுடன் மக்கள் வாழவேண்டும் என்று வலியுறுத்துவது சமய அறத்துடன் கூடிய சமுதாய அறமாக விளங்குகின்றது. சாத்தனார் காட்டும் இவ்வறம் காப்பியத்தின் மையக் கருத்தாக அமைந்து விளங்குவதுடன் மக்கள் எல்லாரும் அமைதியாக வாழ வேண்டுமானால் சமுதாயத்தில் பசித்தோர் இல்லாதிருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது என்பதையெல்லாம் இக்கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *முதன்மையான மூன்று அறங்கள், அரசியல் அறங்கள், சமய அறங்கள், பொது அறங்கள்.*

**முன்னுரை**

படைக்கப்படும் இலக்கியங்கள் எதுவாயினும் படித்து மகிழ்வதற்கு உரியதாக மட்டும் அமையாமல் ஏதேனும் ஒரு வகையில் சமுதாயத்திற்குத் தேவையான அறங்களைக் கூறிச் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முனையவேண்டும். சமுதாய நலனில் நாட்டம் கொள்ளாத படைப்புகள் கால வெள்ளத்தால் அழிந்துபடும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சமுதாய நலம் கருதி பல நல்லறங்களை விளக்கிச் சொல்கின்றார். அதேபோல், மணிமேகலையில் சாத்தனார் பௌத்த சமயக் கருத்துகளை அதிகம் கூறினாலும், பொது நிலையில் மக்களை நல்வழிப்படுத்தும் நல்லறங்கள் பலவற்றைக் கூறிச் செல்வதைக் காண முடிகின்றது.

**முதன்மையான மூன்று அறங்கள்**

சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகளால் பாடப்படாத பதிகத்தில் காப்பியத்தின் மையக் கருத்தாக,

> **“அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்**
> **உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
> **ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்”**
> **(சிலம்பு., பதிகம், அடிகள் : 55-57)**

எனும் மூன்று அறங்கள் சுட்டப்பட்டுள்ளது. பாண்டிய மன்னனின் செங்கோல் பிழைத்தமை, கண்ணகியின் கற்பு மேன்மை, கோவலன் மாதவியைப் பிரிந்தது முதல் அவன் கொலையுண்டது ஈறாக நடந்த பல நிகழ்ச்சிகள் ஊழ் ஆற்றலால் நிகழ்ந்தன எனும் அக்கருத்துக்கு அரணாக ஆசிரியர் கோவலனின் பழம் பிறப்பு வரலாற்றை எடுத்துக்காட்டுவதன் மூலம் மூன்று தலையாய அறங்களைக் காப்பியம் முழுவதும் விளக்கிச் செல்கின்றார் இளங்கோவடிகள் என்பது புலப்படுகிறது.

**அரசியல் அறங்கள்**

ஆட்சி என்பது மலர்ப்படுக்கை இல்லை அது முட்படுக்கை, ஆட்சியில் அமர்ந்து அரசு செலுத்துபவன் மக்கள் நலனில் நாட்டமுடையவனாக இருக்கவேண்டும் நாட்டில் எத்தகைய தீமை ஏற்பட்டாலும் அதற்கு அரசனையே பொறுப்பாக்குவர். எனவே விழிப்புடன் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை,

> **“மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்**
> **பிழையுயிர் எய்திற் பெரும்பே ரச்சம்**
> **குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி**
> **மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்**
> **துன்ப மல்லது தொழுதக வில்லென”**
> **(சிலம்பு., காட்சிக்காதை, அடிகள் : 100-104)**

என்று இளங்கோவடிகள் உணர்த்துகின்றார். இவ்வாறே அரச பூதத்து இயல்பைக் கூறும் பொழுது உவமை வாயிலாக மன்னனின் கடமைகளை,

> **“எண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி**
> **மண்ணகங் கொண்டு செங்கோ லோச்சிக்**
> **கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு**
> **நடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்**
> **உரைசால் சிறப்பின் நெடியோன் அன்ன....”**
> **(சிலம்பு., அழற்படுகாதை, அடிகள் : 56-60)**

என்று சுட்டிக்காட்டுகின்றார். பகையை ஒழிக்க வேண்டும் சிறந்த முறையில் ஆட்சி செய்யவேண்டும்

தீமைகளைக் கடிய வேண்டும் நிலைத்த புகழை ஈட்ட வேண்டும் என்பன போன்ற அறங்களை அரசனுக்குக் கூறுகின்றார் இளங்கோவடிகள். அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற கருத்தும், அரசனுடைய பிழையைச் சுட்டி அழும் பாவை மன்றமும் அரசியல் அறத்தின்பாற் பட்டனவே என்பது தெரிய வருகின்றது.

**சமய அறங்கள்**

பௌத்த சமயம் சார்ந்த அறங்கள் மணிமேகலையில் இடம் பெற்றுள்ளன. அவ்வறங்கள் பௌத்த சமயஞ் சார்ந்தவர்களுக்கு மட்டும் உரியதாகக் கொள்வதற்கில்லை. அவை பொது அறமாகவே விளங்குகின்றன. கள் குடித்தல், ஊன் உண்ணுதல் ஆகிய இரண்டும் தீயவை எனச் சாத்தனார் எடுத்தோதுகின்றார்.

**“மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்**
**பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்...**
**நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்**
**அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்**
**உண்டென உணர்தலின் உரவோர் களைத்தனர்”**
**(மணி., ஆதிரை பிச்சையிட்ட காதை, அடிகள் : 84-90)**

எனவரும் அடிகளில் நல்லறங்களைப் பின்பற்றுவோர் சிறந்த நிலையையும் அல்லறம் செய்வோர் அருநரகத்தையும் அடைவர் என்று கூறிச் சமுாயத்தில் காணப்படும் தீமைகளை ஒழிக்க முனைந்துள்ளார்.

கள்ளையும், உயிர்க்கொலையையும் இன்றும் சான்றோர் வெறுத்து வாழ்வதும், அவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றனர். சாத்தனார் கூறும் இரு அறங்களும் பௌத்த சமயம் சார்ந்த அறங்களாக இருந்தபோதிலும் அவை பொது அறமாகக் கருதப்படும்.

உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது. மறுபிறப்பு என்பது அத்துன்பத்தைத் தொடர வைப்பது. பிறவாமையே மனிதர் எய்துதற்குரிய மேலான உறுதிப்பொருள் அதற்குப் பயன் நோக்காது செய்யும் நல்லறங்களே காரணமாகுமென்பதை,

**“ஐவகை சீலத்து அமைதியுங் காட்டி**
**உய்வகை இவைகொளென் றுரவோன் அருளினன்”**
**(மணி., ஊரலருரைத்தகாதை, அடிகள் : 64-70)**

என்ற அடிகளில் கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐந்திலும் மனத்தைச் செலுத்தாது ஒழுக்கமுடன் மக்கள் வாழவேண்டும் என்று வலியுறுத்துவது சமய அறத்துடன் கூடிய சமுதாய அறமாக விளங்குகின்றது.

**பொது அறங்கள்**

துறவிகள் அறம் போதிப்பதையே தம் கடமையாகக் கொண்டவர்கள். கவுந்தியடிகள் வாயிலாக இளங்கோவடிகள் சில அறக் கருத்துகளை எடுத்தியம்புகின்றார்.

**“வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு**
**யாவதும் உண்டோ எய்தாஅரும் பொருள்”**
**(சிலம்பு., காடுகாண்காதை, அடிகள் : 158-159)**

என்ற அடிகளில் வாய்மையின் இன்றியமையாமையை விளக்குகின்றார்.

சான்றோரால் விலக்கப்பட்ட அறங்களுள் பொய்யாமையும் ஒன்று. பொய்மை தீமையைப் பயக்கும், பொய் சொல்வோரைத் தன் பாசத்தால் பற்றிப் புடைத்துண்ணும் பூதம் புகாரில் இருந்ததாக இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

**“நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு**
**பரகதி இழக்கும் பண்பு ஈங்கில்லை”**
**(சிலம்பு., அடைக்கலக்காதை, அடிகள் : 84-85)**

என்ற அடிகள் பொய்த்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை உணர்த்தக் காணலாம். குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்றும், குற்றமற்றவன் தண்டனைப் பெறக்கூடாது என்ற அறத்தையும் கூறிக் கற்போரை உணர வைக்கின்றார்.

**“அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடல்.....”**
**(சிலம்பு., கொலைக்களக்காதை, அடிகள் : 71-73)**

என இல்லற அறங்களைக் கண்ணகி வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

மனிதனுடைய வாழ்நாள் எல்லையை வரையறுத்துக் கூறுவது அரிது. வாழும் நாளில் ஒவ்வொருவனும் நல்லவற்றைச் செய்யவேண்டும். நாளை செய்யலாம் என்றால் அந்த நாளை வராமல் போகலாம். இளமை, செல்வம் ஆகிய இரண்டும் நிலையற்றது. இவற்றின் தன்மையை மறந்து வாழ்வோர் உலகில் பலர். இளங்கோவடிகள் மறக்கள வேள்வி செய்து வந்த சேரன் செங்குட்டுவனுக்கு நிலையாமையை எடுத்துக்காட்டுகின்றார்.

**“வேந்துவினை முடித்த ஏந்துவாள் வலத்துப்....**
**யாக்கை நில்லாது என்பதை உணர்ந்தோய்....**
**செல்வம் நில்லாது ..........................................**
**இளமை நில்லாது என்பதை எடுத்தீங்கு**
**உணர்வுடை மாக்கள் உரைக்க வேண்டா”**
**(சிலம்பு., நடுகற்காதை, அடிகள் : 134-135)**

என்று கூறி, உடனடியாக அறக்கள வேள்வி செய்யுமாறு தூண்டுவது இளங்கோவடிகளின் அறச் சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இளங்கோவடிகள் காப்பிய முடிவில் தம் கூற்றாகப் பல அறங்களைத் தொகுத்துத் தருவதை,

**"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்**
**தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்**
**பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்**
**ஊனூன் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்**
**தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்......**
**இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா**
**உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது**
**செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்"**
**(சிலம்பு., வரந்தரு காதை : 186-201)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. காப்பியத்தின் இடையிடையே, தான் சொல்லிய அறக் கருத்துகளையும் சொல்லாது விட்ட அறங்களையும் தொகுத்து உரைப்பது அன்றைய சமுதாயத்திற்கு மட்டுமல்லாது இன்றைய சமுதாயத்திற்கும், எதிர்கால சமுதாயத்திற்கும் ஏற்ற அறங்களாகும்.

இளங்கோவடிகள் குறிப்பிடும் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூதச் சதுக்கம் முதலிய மன்றங்கள் அறத்தை நிலை நாட்டுவனவாகவும், சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்துடையனவாகவும் அமைந்துள்ளதை உணர முடிகின்றது.

சாத்தனார் மணிமேகலை என்ற அரிய காப்பியத்தில் வலியுறுத்தும் பேரறம் பசியைப் போக்க வேண்டும் என்பதாகும். காப்பியத்தின் முதல் காதையில் நாட்டு மக்களை வாழ்த்தும் நிலையில், "பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்க" எனக் கூறுவதால் உணர்ந்து கொள்ளமுடியும். சமுதாயத்தில் பசித்தோரின் பசிப்பிணியைக் களைந்தால் வேற எல்லாத் தீமைகளும் தாமாக நீங்கிவிடும் என்று சாத்தனார் அசையாத நம்பிக்கை கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. பல தீமைகளுக்கு மூலமாக இருப்பது பசி. அதனால் ஏற்படும் விளைவுகளை,

**"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்**
**இமைச்சொல் அளவைக் கென்நா நிமிராது"**
**(மணி., பாத்திரம் பெற்றகாதை, அடிகள் : 76-81)**

என விளக்கமாகச் சொல்கின்றார். பசித்தோர்க்கு உணவளிப்பது போன்ற சிறந்த அறம் வேறு ஒன்றும் இல்லை. உணவிடுவது யாருக்கு என்பது பற்றியும் சாத்தனார் எடுத்துரைக்கின்றார்.

**"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்**
**ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்**
**மேற்றே உலகின் செய்ந்நெறி வாழ்க்கை**
**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உயிர்க்கொடை பூண்ட உரவோ யாகிக்**
**கயக்கறு நல்லறங் கண்டனை"**
**(மணி. பாத்திரம் பெற்றகாதை, அடிகள் : 92-98)**

என்ற அடிகளில் ஆற்றா மக்களுக்கே உணவிட வேண்டும், பசித்தவனுக்கு உணவிடுபவன் அவன் உயிரைக் காத்தவனாவான் என்றும் பசிப்பிணியைக் போக்க வேண்டுவது இன்றியமையாதது என வலியுறுத்துகின்றார்.

சாத்தனார் காட்டும் இவ்வறம் காப்பியத்தின் மையக் கருத்தாக அமைந்து விளங்குவதுடன் மக்கள் எல்லாரும் அமைதியாக வாழ வேண்டுமானால் சமுதாயத்தில் பசித்தோர் இல்லாதிருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது.

உலகுக்கெல்லாம் மிக இன்றியமையாத ஓரறத்தினை விளக்குவதற்காக ஒரு காப்பியம் படைத்த பெருமை சாத்தனாரையே சேரும்.

வலியச் சென்று பசித்தோர்க்கு உணவளிக்க வேண்டும் என்பதையும், துணைவியர் துணையுடன் செய்யும் அறமே பயனுடையது என்பதை,

**"பத்தினி யில்லோர் பலவறஞ் செய்யினும்**
**புத்தே ளுலகம் புகாஅ ரென்பது**
**கேட்டு மறிதியோ... ......."**
**(மணி., சிறைசெய்காதை, அடிகள் : 117-119)**

என இல்லறக் கடமைகளுள் ஒன்றாகச் சாத்தனார் இவ்வறத்தை வலியுறுத்துவதை உய்த்துணர முடிகின்றது.

செல்வம், யாக்கை, இளமை எல்லாம் நிலையில்லாதவை, மன்னுயிர்க்கெல்லாம் உண்டி, உடை, உறையுள் கொடுப்பதே சிறந்த அறம் என்று சாத்தனார் பல அறங்களைக் கூறுகின்றார்.

யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார் சாத்தனார். "காணார் கேளார் கால்முடப் பட்டோர் பேணுநர் இல்லோர்" ஆகியோர்களுக்கு மணிமேகலை உணவிட்டதாகக் கூறுவதும் சிந்தனைக்குரியதாகும்.

மணிமேகலை பல்வேறு சமயஞ் சார்ந்தவரிடம் சென்று வாதிட்டும், அறவண அடிகளிடம் நல்லறங்களைக் கேட்டும், சமயக் கொள்கையில் ஈடுபட்டும் அறம் பற்றிய சிந்தனையைப் பெரிதும் வளர்த்துக் கொண்டாள்.

தன்னைப் பற்றிச் சிறிதும் எண்ணிப்பாராது பிற உயிர்களுக்கு உதவுவதையே தலையாய அறமாக அவள் எண்ணி வாழ்ந்தாள் என்பதையும் அறிய முடிகின்றது.

**"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும்**
**மன்னுயிர் முதல்வன் அறமுமீது"**
**(மணி., ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை, அடிகள் : 116- 117)**

என்ற அடிகளில் தன்னுயிரைப் பற்றிய எண்ணமின்றிப் பிற உயிர்கள் அனைத்தையும் காத்தல் தலையாய அறம் என்று வலியுறுத்துவதால் அவளும் அவ்வாறே செயல்பட்டாள் என்பதை உணர முடிகின்றது.

ஒருவனுக்கு எல்லாம் தர வல்லது அறமே என்பதையும் சாத்தனார் பெரிதும் வலியுறுத்துகின்றார்.

**"இளமையும் நில்லா யாக்கையும் நிலையா**
**வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை யாவது"**
**(மணி., சிறைசெய்காதை, அடிகள்: 135-138)**

எனக் கூறுவதால் சமுதாயத்தில் வாழும் பலவகையான மக்களின் பழக்க வழக்கங்களையும், சமுதாயம் சிறப்புற்று விளங்குவதற்காகப் பல அறங்களையும் இளங்கோவடிகளும், சாத்தனாரும் விளம்பியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**முடிவுரை**

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்ற கருத்தும், அரசனுடைய பிழையைச் சுட்டி அழும் பாவை மன்றமும் அரசியல் அறத்தின்பாற் பட்டனவே என்பது தெரிய வருகின்றது. கள்ளையும், உயிர்க்கொலையையும் இன்றும் சான்றோர் வெறுத்து வாழ்வதும், அவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகின்றனர். சாத்தனார் கூறும் இரு அறங்களும் பௌத்த சமயம் சார்ந்த அறங்களாக இருந்தபோதிலும் அவை பொது அறமாகக் கருதப்படும். கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐந்திலும் மனத்தைச் செலுத்தாது ஒழுக்கமுடன் மக்கள் வாழவேண்டும் என்று வலியுறுத்துவது சமய அறத்துடன் கூடிய சமுதாய அறமாக விளங்குகின்றது. சாத்தனார் காட்டும் இவ்வறம் காப்பியத்தின் மையக் கருத்தாக அமைந்து விளங்குவதுடன் மக்கள் எல்லாரும் அமைதியாக வாழ வேண்டுமானால் சமுதாயத்தில் பசித்தோர் இல்லாதிருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. ந.மு.வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
2. புலியூர் கேசிகன், சிலப்பதிகாரம் தெளிவுரை, கொற்றவை பதிப்பகம், 2014.